# தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதிப் பங்கீடு!

## சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி பேச்சுவார்த்தைக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களும் – தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு.கு.செல்வப்பெருந்தகை அவர்களும் இன்று (28–03–2026) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி, தமிழ்நாட்டில் கீழே குறிப்பிட்டுள்ள 28 (இருபத்தெட்டு) சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

**தொகுதிகளின் விவரம்**

1. பொன்னேரி (தனி)
2. திருபெரும்புதூர் (தனி)
3. சோளிங்கர்
4. உதகமண்டலம்
5. ஈரோடு கிழக்கு
6. அறந்தாங்கி
7. கடலூர்
8. மயிலாடுதுறை
9. காரைக்குடி
10. சிவகாசி
11. திருவாடனை
12. திருவைகுண்டம்
13. நாங்குநேரி
14. குளச்சல்
15. விளவங்கோடு
16. கிள்ளியூர்
17. வேளச்சேரி
18. ஊத்தங்கரை (தனி)
19. துறையூர் (தனி)
20. கவுண்டம்பாளையம்
21. ஆத்தூர் (தனி)
22. பென்னாகரம்
23. சிங்காநல்லூர்
24. அம்பாசமுத்திரம்
25. கிருஷ்ணகிரி
26. உசிலம்பட்டி
27. சங்கரன்கோவில்
28. மேலூர்

(கு.செல்வப்பெருந்தகை)
தலைவர்,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

(டி.ஆர்.பாலு)
கூட்டணி பேச்சுவார்த்தைக்குழுத் தலைவர்,
தி.மு.க.

## சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி பேச்சுவார்த்தைக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களும் – இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)–ன் தமிழ்நாடு மாநிலக் குழுச் செயலாளர் திரு.பெ.சண்முகம் அவர்களும் இன்று (28–03–2026) போட்டியிடும் தொகுதிகள் குறித்து கலந்து பேசியதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாட்டில் கீழே குறிப்பிட்டுள்ள **ஐந்து** தொகுதிகளில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

**தொகுதிகளின் விவரம்**

1. கீழ்வேளூர் (தனி)
2. கந்தர்வக்கோட்டை (தனி)
3. பத்மநாபபுரம்
4. பழனி
5. திருவொற்றியூர்

(பெ.சண்முகம்)
செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

(டி.ஆர்.பாலு)
கூட்டணி பேச்சுவார்த்தைக்குழுத் தலைவர்,
தி.மு.க.

## சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி பேச்சுவார்த்தைக்குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்களும் – மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக அவைத்தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் அவர்களும் இன்று (26–03–2026) போட்டியிடும் தொகுதிகள் குறித்து கலந்து பேசியதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில்

1. மதுரை தெற்கு
2. மொடக்குறிச்சி
3. கடையநல்லூர் ஆகிய **மூன்று** தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்திலும்;

**மற்றும்**

4. சீர்காழி (தனி) தொகுதியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒதுக்கப்படும் சின்னத்திலும் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது

(ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ்)
அவைத்தலைவர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

(டி.ஆர்.பாலு)
கூட்டணி பேச்சுவார்த்தைக்குழு தலைவர்
தி.மு.க.

### விஜய் கூட்டத்திற்கு அனுமதி மறுப்பு விவகாரம் - அரசுக்கு சம்பந்தம் இல்லை!

# தேர்தல் ஆணையமே அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்குகிறது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



சென்னை, மார்ச் 29 -

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த பிறகு, அரசியல் கட்சிகளின் கூட்டத்திற்கு தேர்தல் ஆணையம் தான் அனுமதி அளிக்கும் என்பதால், பெரம்பூரில் விஜய்யின் தேர்தல் பிரச்சாரத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கும், அரசிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், அ.தி.மு.க.வை சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. சோழிங்கநல்லூர் தொகுதியை சேர்ந்த அ.தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் 300 பேர் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், பகுதி செயலாளர்கள் ரவிச்சந்திரன், மதியழகன், வட்டச் செயலாளர் ஏகாம்பரம், அவைத் தலைவர் குணசேகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெரம்பூரில் விஜய் கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கும், அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பித்தால் தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கி வருவதாகவும் விளக்கமளித்தார்.

# குடிநீர் - கழிவுநீரகற்று வரி, கட்டணங்களை மார்ச் 31ஆம் தேதிக்குள் செலுத்திடுக!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 29-

சென்னை குடிநீர் வாரியத்திற்கு பொதுமக்கள் செலுத்த வேண்டிய குடிநீர் / கழிவுநீரகற்று வரி, கட்டணங்கள் மற்றும் நிலுவை தொகையினை மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டும்.

வரி செலுத்துவதற்கு ஏதுவாக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்கள் அரசு விடுமுறை நாட்களான சனிக்கிழமை (28.3.2026), ஞாயிற்றுக்கிழமை (29.3.2026) மற்றும் செவ்வாய்கிழமை (31.3.2026) அன்றும் இயங்கும்.

மேலும், நுகர்வோர்கள் https://bnc.chennaimetrowater.in/#/public/cuslogin என்ற வலைதளத்தைப் பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக செலுத்தலாம். இசேவை மையங்கள், UPI, வசூல் மையங்களில் உள்ள QR குறியீடு மற்றும் iPoS போன்ற பிற கட்டண முறைகளையும் பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் / கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களை செலுத்தலாம்.

எனவே, நுகர்வோர்கள் 31.03.2026 க்குள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை உரிய நேரத்தில் செலுத்தி மேல்வரியைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் தெரிவித்துள்ளது.



# டெல்லி பாசிஸ பா.ஜ.க. ஆட்சிக்கு, தமிழ்நாடு எப்போதும் OUT OF CONTROL தான்!